அன்புடையீர்

நமது ஏ.வி.எம்.மாரிமுத்து நாடார் **மேல்நிலைப் பள்ளியின் 50 வது ஆண்டு பொன்விழா மற்றும் பொன்விழா கட்டிடத் திறப்பு விழா வரும் ஆகஸ்ட் 15 ஆம் நாள் திங்கள் கிழமை** நடைபெறவுள்ளது. அதற்கான பள்ளி அழைப்பிதழ் நமது வாட்ஸ் ஆப் மூலமோ தபால் மூலமோ அனுப்பப்படும்.

இது நம் ஏ.வி.எம். பள்ளியின் குடும்ப விழா. நாம் ஏ.வி.எம். பள்ளிக் குடும்பத்தின் மூத்த பிள்ளைகள். நாம் ஏ.வி.எம்..எனும் கல்வித் தோட்டத்தில் முன்னாள் மலர்ந்த மாணவர்கள். எனவே இவ்விழாவில் நம் பங்கேற்பு சிறப்பாக அமைய விரும்புகிறோம்.

1.ஆகஸ்ட் 15 திங்கள் கிழமை காலையில் **7-00 முதல் 7-30 க்குள்** நம் பள்ளிக்கு வருகை தாருங்கள். **பள்ளியின் அலுவலகத்திற்கு மேல் உள்ள மாடியில் இருக்கும் தேர்வு ஹால்** நம் பழைய மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு நாம் ஒன்று கூடுவோம். தங்கள் பெயர் முகவரிகளைப் பதிந்து கொள்வோம்.

2. காலை உணவு பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 7-30 -8-00 **மணிக்குள் காலை உணவை** முடித்து விடுவோம்.

3**. 8-15- மணியளவில் பொன்விழா ஊர்வலம்** மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. அதில் நாம் கலந்து கொள்வது தற்போது படிக்கும் மாணவர்களுக்கு உற்சாகத்தையும் பார்க்கும் பெற்றோர்களுக்கும் நமக்கும் மனமகிழ்ச்சியையும் தரும் ( We hope it will be an emotional, sentimental and inspirational one. ) இதனால் நம் சங்கம் எல்லோர் முன்னும் அடையாளப்படுத்தப்படும். முன் மலர்ந்த மாணவர் சங்கம் சார்பில் **பேனர் ஏந்தி** முன் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் சங்கத்தின் **பேட்ச்** வழங்கப்படும்.**250 பேருக்குக் குறையாமல்** கலந்து கொள்ள வேண்டுகிறோம்.உங்கள் **Batch** மாணவர்களைத் தொடர்புகொண்டு அனைவரும் வாருங்கள்.

4. பின்னர் விழா நிகழ்ச்சிகள் தொடங்கும். விழாவில் நம் முன் மலர்ந்த மணவர் சங்கம் சார்பில் சிறப்பு சொற்பொழிவாளராக போடுரெட்டியபட்டி திரு K..ராஜகோபால் என்ற மாணவரும், சங்க ஆலோசகர் திரு தர்மராஜு ஆசிரியர் அவர்களும் பேச இருக்கிறார்கள்.

5. நம் சங்கத்தின் சார்பில் நன்கொடை வழங்கியவர்கள் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பொன்விழா மலரும் வழங்கப்படும்.

6. மதிய உணவு கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7. மதியம் **1-00 மணியளவில்** நமது சங்கத்தின் கூட்டம் பள்ளியில் தேர்வு ஹாலில் வைத்து நடைபெறும். அதில் தவறாது கலந்துகொள்ள வே:ண்டுகிறோம்.

குறிப்பு : தங்கள் வருகையை செயலர் பாபு அவர்களுக்கு ( **Ph.93450 80829 )** போன் செய்து உறுதி செய்யவும்.

**மீண்டும் பள்ளிக்குப் போகலாம்! நாமும் அங்கே கூடலாம்!!**

அன்புடன்

முன்மலர்ந்த மாணவர் சங்கம்

R.ரெங்கசாமி - தலைவர், K.பாபு - செயலர் R.குமார் - பொருளாளர்,

V.முனீஸ்வரன் துணைத்தலைவர் V. ராதாகிருஷ்ணன்- துணை செயலர்